தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2024 விடை கடகம் (சூலை) விலை உருபா 1-50 (இதழ எண்: 164)

பாவலரேறு ஐயா அவர்களுக்குக் காவல் நீட்டிப்பு!

'தடா'க் கொடுஞ்சிறையில் காவல் நீட்டிக்கப்பட்டாலும் நற்றமிழ்ப் பயிர் செழிக்கப் பணியாற்றுகிறார்-நம் ஐயா!

7-7-'93-அன்று வழக்குமன்றம் வந்த பாவலரேறு அவர்களைச் சூழ்ந்தது தமிழ்க் கூட்டம்!

நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கடந்த 27-1-93-லிருந்து கொடுந் 'தடா' பிரிவில் சிறையில் வாடுவது, தமிழின உணர்வும் உரிமை வேட்கையும் உள்ளோர் யாவரும் அறிந்ததே!

'தடா' சிறப்பு வழக்குமன்ற நடுவர் திரு. சௌந்திர பாண்டியன் அவர்கள் விடுமுறையில் இருப்பதால், நடுவர் திரு. இராதாக் கிருட்டிணன் அவர்கள் முன்னிலையில் 7-7-93 அன்று காலை 11மணி அளவில் காவல்துறை உயர் அதிகாரிகள் உடன்வர, துமுக்கி ஏந்திய காவலர்களின் மிகுந்த பாதுகாப்போடு நம் பாவலரேறு ஐயா அவர்கள் 'அரிமா'த் தோற்றத்தோடு வந்தார்கள்.

அடைக்கப்பட்டுச் சிறையிலிருந்து அழைத்து வரப்பட்ட ஐயா அவர்களைக் கண்டு உணர்வெழுச்சியாய் தமிழ்க் கூட்டம் சிலிர்த்தெழுந்து முழக்கமிட்டது.

ஐயா அவர்களைக் காண கூடியிருந்த ஏராளமான அன்பர்கள் யாரையும்—காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். அரசியல் புரட்டர்களும் ஆளும் கொழுப்பர்களும் சுற்றித் திரிகிறபோது—உண்மைத் தமிழ் அறிஞரைக் காண்பதுகூட மறுக்கப்பட்டது; ஆளுமையாளர்களால்

ஐயா வரும்போது வழக்குமன்றத்திற்கு உள்ளேயிருந்த ஐயா அவர்களின் துணைவியார் திருவாட்டி தாமரை அம்மையும், மற்றும் வழக்கறிஞர்களும் வணக்கம் தெரிவித்து அமர்ந்தார்கள். காவல்துறை அதிகாரி ஒருவர் ஐயாவோடு இருந்த அம்மாவை கூட வெளியில் செல்லுமாறு கட்டாயப்படுத்தினர். உடனே நம் வழக்கறிஞர் திரு.சுலைமணி அவர்கள் தலையிட்டு உடன இருக்குமாறு செய்தார்.

வழக்கறிஞர் திரு. சங்கரசுப்பு அவர்கள் ஐயாவைத் தடாவில் சிறைப்படுத்தியது பற்றியும் பிணையலில விட மறுப்பதைப் பற்றியும் வழக்காடினர். ஆயினும் நடுவர் அவர்கள் அடுத்து 3-9-93 அன்று உசாவலுக்காக வழக்கைத் தள்ளி வைத்தார்.

தென்மொழி உணர்வளர்களும், உ.த.மு.க. அன்பர்களும்,தென்மொழி அனபர்களும ஐயாவைப் பார்க்க வழக்குமன்றம் வந்திருந்தனர்.

83 அகவையுடைய ஐயாவின் அம்மா தன் மகனைக் கட்டியணைத்து அழுதகாட்சி எல்லாரையும் கண் கலங்க வைத்தது.

வெளியில் நின்றிருந்த தமிழ்த் தேசிய இன உணர்வாளர்களும் அடக்குமுறைச் சட்ட எதிர்ப்பு கூட்டியக்கங்களின் உறுப்பினர்களும் கீழ்க்காணுமாறு முழக்கம் செய்தனர்.

> தமிழக அரசே! தடா' அடக்குமுறைச் சட்டத்தை உடைத்தெரியப் போராடுவோம்!
>
> தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்யத் தொடர்ந்து போராடுவோம்!
>
> தமிழக மக்கள் உரிமைக்காக இறுதிவரை போராடுவோம்!

—விண்ணை முட்டும் முழக்க ஒலிகள் சிறை நோக்கி அழைத்துச் செல்லப்பெற்ற பாவலரேறு ஐயா அவர்களின் காதுகளில் ஒலித்தன.

'தடா'வின் கொடுஞ்சிறையில் சிறிய கொட்டடிக்குள் 'வெந்ததும் வேகாததுமான' உணவை உண்டு கொண்டு நம் பாவலரேறு ஐயா அவர்கள் சிறிதும் தளர்வில்லாமல் தமிழ்த் தொண்டு ஆற்றுகிற முனைப்போடு சிறை நோக்கிச் சென்றார்.

ஆளுமை அரசின் அரட்டல்கள் ஐயா அவர்களின் அருந்தமிழ்ப் பணியை அடைத்து வைக்கலாம்; அழித்துவிட முடியாது.

> அன்று—ஆளுமைப் பார்ப்பனர்களின் கடுமைக்குள் சிக்குண்டு வெளிவந்தது திருக்குறள்—
>
> இன்று—ஆளுமை அரசின் கடுஞ் சிறைக்குள் புத்துயிர் கொள்கிறது அதன் மெய்ப்பொருள் உரை.

O

நல்ல முயற்சி என்றாலும் நாடகமாகி விட்டது!!

காவிரிச் சிக்கலில் நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பினை கருநாடக அரசு செயல்படுத்த இந்திய அரசு உறுதியளிக்கவேண்டும் என்று கோரி தமிழக முதலமைச்சர் கடந்த18-7-93 இல் திடுமென பட்டினிப் போராட்டத்தில் இறங்கினார். இப் போராட்டத்தை தமிழக மக்கள் வரவேற்றனர். கோரிக்கை நிறைவேறும்வரை போராட்டத்தை தொடரவேண்டும் என்று நடுநிலையாளர்கள் விரும்பினர், ஆனல் இந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. பிழைப்பு அரசியல் நடத்துபவர்களின் ஏமாற்றுத் தன்மை மறுபடி வெளிப்பட்டு விட்டது.

ஆட்சிக்கு வந்த இரண்டு ஆண்டுகளில் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறையோ, கவனமோ செலுத்தாமல் ஆரவார ஆடம்பர கேளிக்கை விழாக்களை நடத்திக்கொண்டு விளம்பர வெறியர்களாக உலா வந்துகொண்டிருந்தார் நம் முதலமைச்சர். மக்கள் பயன்படுத்தும் அன்றாட அடிப்படைப் பொருள்களான அரிசி, பால், சர்க்கரை, மண்எண்ணெய், பயணச்சீட்டு உட்பட பல பொருள்களின் விலையை பல மடங்கு உயர்த்தியும் ஊழல், கையூட்டு, அடக்குமுறைகளில் ஈடுபட்டும் வன்முறை ஆட்சி நடத்தி வந்தார், இத்தகைய கொடுநெறி ஆட்சியால் மக்கள் ஆதரவு வெகுவாக குறைந்துவிட்டதையும் தன் செல்வாக்கு சரிந்து விட்டதையும் ஈடு செய்யவும் பழநி, இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலைச் சந்திக்க வேண்டியும்தான் இந்தப் பட்டினிப் போரில் அவர் இறங்கியிருக்கிறார் என்றும் 'காவிரித் தண்ணீர் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக இல்லை என்றும் இப்போது மக்கள் பேசத் தொடங்கிவிட்டனர்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் உயரிய ஏழு கொள்கைகளுள் ஒன்று பொய்யும், ஏமாற்றும், ஆரவாரமும், பூசலும் இல்லாத அரசியல் என்பதாகும். இக்கொள்கையின் வலிவும் தேவையும் மறுபடி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

கருநாடகம் நடுவர் மன்ற ஆணையைச்செயல்படுத்த முன்வராதபோது அது செயல்படுத்தப் படுவதைக் கண்காணிக்கக் குழு என்று கூறுவது

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

நடுவணரசின் ஐந்தாய அரசு (பஞ்சாயத்து ராச்) கரவான, சூழ்ச்சியான ஓர் அமைப்பு!

சிற்றூர்களிடம் நடுவணரசுக்கு நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது! மாநில அதிகாரத்தை ஒடுக்கி, ஆட்சி எல்லையைக் குறைக்க வழிவகுக்கும் தேசிய இன உணர்வை அடியோடு மழுக்குகிறது!

மாநிலங்களில், அவற்றின் அதிகாரத்தை ஒடுக்கித், தன் ஆட்சிக் கால்களை எவ்வாறு அகல ஊன்றிக் கொள்ளலாம் என்று திட்டமிட்டு, மிக மிகக் கரவாகவும், மிகவும் சூழ்ச்சியாகவும் எண்ணிப் பார்த்தது. இறுதியில் தாயிடத்திலிருந்து குழந்தைகளைப் பிரிக்கின்ற முறையில் மாநிலங்களின ஆளுமையில் உள்ள சிற்றூர்ப்புறங்களை நேரடியாகத் தன் ஆளுமையின் கீழ்க் கொணரும் முயற்சியாக ஐந்தாய அரசு (பஞ்சாயத்து ராஜ்ஜியம) என்னும் ஓர் அமைபபை உருவாக்கிக் கொணடது.

இந்த ஐந்தாய ஆட்சி அமைப்பைப் பற்றிச் சுருக்கமாக மதிப்பிட்டால், நடுவணரசு, மாநில அரசிடம் உள்ள அதிகாரங்கள் வாங்கிச் சிற்றூர்ப்புறங்களில், ஐந்து பெயர்களை கொண்ட குழுவினரிடம் ஒப்படைக்கின்ற செயலே ஆகும்.

ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறு முழு அதிகாரம கொண்ட மாவட்ட அமைப்புகள் மாவட்டக் குழுவாட்சி முறை (District Board Administration) என்று ஒரு முறையிருந்தது. அதில், இன்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்(District Collector), வட்டாட்சித் தலைவர் (Tashildar) ஆகியோருக்குள்ள பெரும்பாலான அதிகாரங்கள் கொண்ட குழு ஒன்று செயல்பட்டுச் சிற்றூர்ப்புறங்களில் உள்ள கல்வி, சாலை அமைப்பு, ஊர்ப் பாதுகாப்பு, தண்ணீர் வசதி முதலியவற்றைக் கவனிக்கவும் அவற்றுக்கான பொருள் ஒதுக்கீடு செய்யவும் போதுமான அதிகாரம் பெற்றிருந்தது. மாநில அரசும் அதற்குப் போதுமான பொருள் ஒதுக்கீடு செய்து வந்தது. அந்த மாவட்டக் குழுவாட்சி உறுப்பினர்களும் தேர்தல் வழியாகத்தான் தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள். ஆனால் பேராயக்கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றுக் காமராசர் முதலமைச்சராக வந்தபின் அம் மாவட்டக் குழு ஆட்சி முறையைத் தவிர்த்து விட்டு சிற்றூர்ப் புறங்களை ஊராட்சி மன்றங்களின் ஆட்சிப் பொறுப்பிலும், அவற்றைப் படிப்படியாக ஆள்கின்ற அதிகாரத்தை வட்டாட்சியர்,மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் பொறுப்பிலும், உட்படுத்தினர். ஆனால் அனைத்து அதிகாரங்களும் மாநில அமைச்சரவைக்கு உட்பட்டிருந்தன.

இது நாள் வரையிருந்த இம்முறையை மாற்றி மாநில அமைச்சரவைக்கு உட்பட்டிருக்கும் அதிகாரங்களைக் குறைத்து, பொருள் ஆட்சி உட்பட அவற்றை நேரடியாகச் சிற்றூர்ப்புற ஐந்தாயங்களே (பஞ்சாயத்துகளே) ஆளுமை செய்யும்படி, அங்கு அரசியல் அமைப்பில் சட்டத்தில் உள்ள 64-ஆவது பிரிவை விரிவுபடுத்திப் புதுச் சட்ட அமைப்புகளை இப்பொழுது ஏற்படுத்தியுள்ளது நடுவண் அரசு.

இப்படிச் செய்ததன் வழி, நடுவண் அரசு, சிற்றூர்ப்புற ஐந்தாய ஆட்சியோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு தனக்கேற்றவாறு, சிற்றூர் ஆட்சியை அமைத்துக் கொள்ள முடியும. நடுவணரசு கொணரும் திட்டங்கள் அனைத்தையும் எவ்வகை மறுப்பும் இன்றி அச் சிற்றூர்ப்புற அமைப்புகள் செயல்படுத்தியாக வேண்டும என்னும் கட்டாயம் அவற்றுக்கு உண்டு. இதனை நடுவணரசுக்கு வேண்டாத அல்லது வேறான மாநில அரசுகள் தடைப்படுத்த முடியாது .இபபொழுதுள்ள நிலையில் நடுவணரசு போடும் திட்டங்களை எதிர்க்கட்சிகளின் கைகளில் உள்ள மாநில அரசுகள் மறுக்கலாம் அல்லது தவிர்க்கலாம்.இனி அவ்வாறு நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இதுநாள் வரை மாநில அரசுகள் சொல்வதை, நேற்றுவரையிருந்த ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மறுக்க இயலாது.மாநில அரசுகளின் கட்டளைபடி அவை செயற்பட்டாக வேண்டியிருந்தது இனி, ஐந்தாய அமைப்புகள் அவ்வாறு செயல்பட வேண்டிய தேவையில்லை. ஆனால் நடுவணரசு இடும் கட்டளைப்படி மாவட்ட ஆட்சி அமைப்புகளும், அவற்றின் வழி ஊராட்சி ஒன்றியங்களும், அவற்றின் வழி ஐந்தாயங்களும், செயல்பட வேண்டியிருக்கும். இதில் மாநில அரசுகள் குறுக்கிட முடியாது. இம் மாறுதல்களால், மாநிலங்களுக்குள்ள அதிகாரங்கள் உரிமைகள் தவிர்க்கப் படுகின்றன; தகர்க்கப்படுகின்றன. **இதுதான் ஐந்தாய அமைப்பால் மாநில அரசு இழக்கின்ற உரிமை. இந்த உரிமையை நடுவணரசு நேரடியாகக் கைப்பற்றிக் கொள்கிறது.** மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழியாக இந்த அதிகாரச் செயல்பாடுகள் நேரடியாகவே நடுவணரசால் நிகழ்த்தப் பெறும். பொருளதிகாரத்தைக் கொண்டும் கூட மாநில அரசுகள, தங்கள் மாநிலங்களில் உள்ள சிற்றூர்களை இனி மிரட்ட முடியாது; பணிய வைக்க முடியாது; தங்கள் சார்பாகத் திருப்ப முடியாது. அந்தப் பொருள் ஒதுக்கீடும், நடுவ-

ணரசு வகுத்துக் கொடுக்கின்ற முறையில், மாநில பொருள் குழு ஐந்தாயங்களுக்கு இயல்பாகவே ஒதுககியாக வேண்டும். இதிலும் மாநில அரசு தன் அதிகாரத்தைக் காட்ட முடியாது. வரவு செலவு-கணக்குகளைப் பார்க்கின்ற அதிகாரத்தைக் கூட நடுவணரசு மாநில அரசுகளுக்கு விட்டுவைக்க வில்லை. அதைக் கூட நடுவணரசின் அதிகாரத்தில் உள்ள மாநிலத் தணிக்கை அதிகாரி பார்த்துக் கொள்வார்.

இம் முறைகள் பற்றி வெளிப்படையாக—பச்சையாகச் சொல்வதானால், வேர்கள் நேரிடையாகக் கிளைகளோடு தொடர்பு கொள்ளும். அடிமரம் வழியாகத் தொடர்பு கொள்ளத் தேவையில்லை. எனவே கிளைகள் அடிமரத்துக்கன்று, வேர்களுக்கே நன்றிக் கடன் ஆற்றும். இதனால், மாநிலத்தில் எந்தக் கட்சி, ஆட்சி அமைக்கிறது என்பது பற்றி நடுவணரசுக்குக் கவலையில்லை. நடுவணரசில் உள்ள கட்சிக்குத்தான நாடு முழுவதும் கடமைப் பட்டிருக்கும்.

இதனால் மாநிலங்களுக்குள்ள தனித்தன்மை அடிப்படையில் தேவைகளையும், செயற்பாடுகளை-யும் நிறைவு செய்யாமல் நடுவண் அரசு தன் போக்கில் மட்டுமே செயற்பாடுகளைச் செய்யும். இங்குள்ள சிறு சிற்றூரின் கூக்குரல் தில்லிவரை கட்டாயம் கேட்காது. பல நேரங்கள் மாநிலங்-களின் தனித் தன்மைக் குரலே தில்லிக்குக் கேட்ப-தில்லை.

தில்லிக்கருகிலிருக்கும் சிற்றூர்களின் தேவைகள் மிகுதியாக நிறைவு செய்யப்பட்டும் தொலைவு மாநிலங்களிலுள்ள சிற்றூர்கள் தொண்டை வரளக் கத்தியும் யாருக்கும் கேட்காமல் போவதற்கும் வழி உறுதியாக அமையும்.

இந்தித் திணிப்பு போன்ற வல்லாளுமை அதிகார மேலாளுமைப் போக்குகள் மிகுதியாக இருக்கும். மாநில அரசுகளே சிற்றூர்களின் வளர்ச்சிக்கு அக்கறை காட்டாதபோது, எங்கோ நடுவில் இருக்கும் தில்லி நடுவணரசு கவனம் செலுத்தும் என்பது தெளிவான ஏமாற்றுக் கொள்-கையாகவே இருக்கும்.

இதன் வழியாக அரசியல் விளம்பரப் பரப்புதல்கள், மாநில அரசை மீறிய நடுவணரசின் உள்நுழைவு-கள் இவற்றுக்கே இச் சட்டங்கள் வழிவகுக்கும்.

தேசிய இனங்களின் உரிமைகள் அறவே நசுக்கப்படும். மக்களிடம் செல்வாக்கு இழந்து ஒரு போலியான ‘பாரத’ ஒற்றுமை நிலவும்.

அந்த போலி ஒற்றுமை உண்மை உள்ளார்ந்த ஒற்றுமையாக இராமல் திராவிட மொழி உடன பிறப்பாளர்களிடையேயும் கூட மேலும் பகைமை-தான் உருவாக்கும்.

இவ்வாறான ஐந்தாய (பஞ்சாயத்து) அரசின் தேவைகள் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. இது தேவையா என்பதை தமிழினம் மட்டுமல-லாமல் தேசிய இனங்கள் அனைத்தும் எண்ணிப் பார்க்கவேண்டும். (இதழ் எண்-122) O

வீரமும் அறிவும் திறமையும் மிக்க தமிழீழத் தமிழர்கள்!

இலங்கைச் சிங்கள வெறி அரசு தமிழீழப் பகுதிக்கு அறிவித்துள்ள பொருள்தடை காரணமாகவும் நெடுங்காலமாக அப் பகுதியில் போர் நடைபெற்று வருவதாலும் அப் பகுதித் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத தேவையான அடிப்படை பொருள்களுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன.

இதனால் அங்குள்ள மக்கள் சோர்ந்து விடாமல் தங்களுக்குத் தேவையான அந்தப் பொருள்களுக்கு மாற்றாக வேறு பொருள்களைத் தங்களுடைய சிந்தனை, அறிவுக் கூர்மை, ஆராய்ச்சி மனப் பாங்கினைப் பயன்படுத்தி புதிய புதிய உத்திகளைக் கையாண்டு உருவாக்கிக் கொள்கிறார்கள். இப்பகுதி-யில் கன்னெய், எரிநெய்(டீசல்) தட்டுப்பாடு இருப்பதால் மக்கள் மண்ணெய் மற்றும்(தாவர)நெய் இரண்டையும் கலந்து அதை எரிபொருளாகப் பயன்படுத்தி, இயங்கி வண்டிகளை (வாகனம்) ஓட்டு-கின்றனர். தானி(ஆட்டோ), இருசக்கர பொறி (மோட்டார்) உந்துகளின் தொடக்க இயங்குதலுக்கு மேற்படி எரிபொருளைப் பயன்படுத்தாமல் சிலதுளி கன்னெய் அல்லது ‘கோலோகன்’ என்ற பொருளை ‘கார்பரேட்டர்’ என்று உறுப்புடன் நிலையாக இணைக்கப்பட்டுள்ள குழாய் வழியாகச் செலுத்தி எரிபொருள் செலவைக் குறைக்கின்றனர்.

வண்டிகளில் பொருத்தக் கூடிய மின்கலங்-களுக்கு (பேட்டரி) தடையிருப்பதால் சுமையுந்து-களை மேடான பகுதியில் நிறுத்தி வைத்து அதைத் தள்ளிவிட்டு இயக்குகிறார்கள். இது போன்ற வண்டிகளின் தலைவிளக்குகளுக்குப் பகரமாக கை விளக்கு (டார்ச்) அல்லது வேறு விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர்.

இப் பகுதிகளில் மின்சாரம் இல்லையென்பதால் மண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் மண்ணெய் 1 லிட்டர் 90 உருபா வரை விற்கப்படுவதால் மண்ணெய் குறைவாகச் செல வழிக்கக்கூடிய புதிய வகை விளக்கைக் கண்டு-பிடித்துள்ளனர். இந்த விளக்கில் பருத்தி, உப்பு, மண்ணெய் ஆகியன கலந்த பசையைப் பயன்படுத்தி எரிக்கின்றனா. மண்ணெய் நெடுநேரம் நீடித்திருக்க உப்பு ஊக்கியாக பயன்படுவதால் இந்த விளக்கு நெடுநேரம் எரிகிறது. இவ் விளக்கிற்கு இம் மக்கள் என்ன பெயர் வைத்துள்ளனர் தெரியுமா? இப் பகுதிக்கு மண்ணெய் வருவதற்குத் தடைபோட்ட சிங்களப் படைத் தலைவன் ‘கெப்பேகடுவா’வின் பெயரையே வைத்துவிட்டனர்.

தங்கள் உரிமையை நிலைநாட்ட தமிழீழத் தமி-ழர்கள் வீரமுடன் போரிடுவதோடு, அப் போரினால் ஏற்படும் தாக்கங்களையும் தாங்கி அதை எதிர்த்து வெற்றி பெறவும் செய்வது நமக்கு ஒரு படிப்பினை. O

மக்களின் உரிமையியலும் பொருளியலும்!

—க. கண்ணன், அறி.இ, கரடிப்பட்டி,

முன்னுரை:

உலகம் முழுவதும் நடைபெற்ற—நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மக்களின் பல்வேறு வகையான போராட்டங்களை இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி விடலாம். முதலாவது, மற்ற உயிரினங்களுக்கிருப்பதைப் போன்ற தங்கள் இயல்பான வளர்ச்சிக்கான **மனவியல்** சார்ந்த உரிமையியல் போராட்டங்கள். இரண்டாவது, தங்கள் உயிர்வாழ்வதற்கான—துய்ப்பதற்கான **அறிவியல்** சார்ந்த பொருளியல் போராட்டங்கள். மாந்த இனம் சமநிலை எய்துவதற்கு இந்த இரு முனைகளிலும் தொடர்ந்த போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் மக்களின் பொது உரிமைகளுக்கான போராட்டங்கள் ஓரளவேனும் முடிவடைந்து, அடுத்த கட்ட பொருளியல் சமநிலைக்கான போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவைப் போன்ற பின் தங்கிய நாடுகளில் மக்களின் முதல் கட்டமான மனவியல் சார்ந்த பொது உரிமையியல் போராட்டங்களே இன்னும் நிறைவுறாத நிலையில் இருப்பதால், மக்கள் ஒன்றிணைந்து அறிவியல் சார்ந்த பொருளியல் சமநிலைக்கான போராட்டங்களைத் தொடங்க முடியாத நிலையில் இருக்கின்றனர். மக்களின் உரிமையியலையும் பொருளியலையும் படிப்படியாகப் பொதுவாகவும் சிறப்பாகவும் விளக்குவோம்.

நம் மூதாதையர் கடந்து வந்த பாதை:

பிற உயிரினங்கள் இயற்கையோடு இயைந்து உரிமையோடு வாழ்ந்தும், வலிமையுள்ளது வலிமையற்றதை உண்டும் தங்கள் இறுதி நிலையை எய்துகின்றன. அவ்வாறே மாந்த இனத்திலும் நம் மூதாதையர் கடந்து வந்த பாதையையும், இவ்விடைகாலத்தில் நாம் வாழ்கின்ற நிலையையும் தெளிவாக அறிந்து கொண்டால்தான், இயற்கையின் அழிவைத் தடுத்து தன்னைத் தானே காத்துக் கொள்ளவும் மாந்த இனம் தொடர்ந்து நிலைபெறவும் சரியான பாதையில் செல்ல முடியும்.

ஒருவரையொருவர் கண்ணால் பார்த்தாலே தீட்டு, உடலால் தீண்டினாலே தீட்டு என்ற நிலையில், ஓர் ஊரின் குறிப்பிட்ட இடத்திற்கு மேல் சில சாதியினர் வரக் கூடாது என்ற கட்டுத் திட்டமும் அவ்விடத்திற்குத் **தீண்டல்பாறை** என்ற பெயர் சூட்டப்பட்ட வரலாறும் இந்த புண்ணிய(!) மண்ணில்தான் இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் நடைபாதையில் நடந்து சென்றாலும், பாதையில் எச்சில் துப்பினாலும் பாதை தீட்டாகி விடும் என்று தங்கள் இடுப்பிற்குப் பின்னால் துடைப்பத்தைக் கட்டிக் கொண்டும் கழுத்தில் தொங்கிய மண்கலயத்தில் எச்சில் துப்பிக் கொண்டும், உயர்சாதியினர் வாழ்கின்ற வீதிகளை இரவில் தங்கள் உடல்களை மறைத்துக் கொண்டும் தூய்மை செய்தும், நம் மூதாதையர் விலங்கினும் கீழாகச் செத்து மடிந்திருக்கின்றனர். இந்த வாழ்க்கைக்குப் பெயர்தான் புண்ணிய(!)வாழ்க்கை என்றும், இந்த மண்ணிற்குப் பெயர்தான் புண்ணிய (!) பூமி என்றும் அழைக்கின்றான் சங்கராச்சாரி பார்ப்பான். மக்கள் வரலாறு முன்னேக்கிச் செல்லச் செல்ல கண்ணால் பார்த்தாலே தீட்டு என்ற 'காணாமை' கால ஓட்டத்தில் காணாமல் போய்விட்டது. ஆனால் தொட்டால் தீட்டு என்ற 'தீண்டாமை' மட்டும், நம் மூதாதையரின் தொடர்ந்த போராட்டங்களுக்குப் பின்னும், இன்னும் வல்லாண்மைச் சாதியரால் கடைப்பிடிக்கப் படுகின்றது. மக்களின் உயிரியக்கத்திற்கும் பொது உரிமைக்கும் எதிரான இப்பழக்கத்தை நம் காலத்திலேயே ஒழித்துவிட்டு அடுத்த கட்ட பொருளியல் போராட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

நடைமுறை வாழ்க்கையில் பொருள் உருவாக்கமும் உரிமைப் போராட்டங்களும்:

இன்றைய நடைமுறையில் மக்கள் உயிர் வாழ்வதற்காகப் பொருள் உருவாக்கத்தில் அனைத்துச் சாதியைச் சேர்ந்த பாட்டாளி மக்களும் கடுமையாக உழைக்கின்றனர். எடுத்துக் காட்டாக, ஓர் உயர் சாதியைச் சேர்ந்தவர்களுக்கு வேளாண்மை செய்வதற்காகப் பாட்டாளி மக்கள் தங்கள் உடல் உழைப்பின் மூலம் கிணறு வெட்டுகின்றனர். ஆனால் வேலை முடிந்தவுடன் அக் கிணற்றுக்குள் இருக்கின்ற நீரைப் பயன் படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பாட்டாளி மக்களுக்கு உரிமை இல்லை. அவ்வாறே அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு இப் பாட்டாளி மக்கள் பலவகையிலும் மிகக் கடினமாக உழைக்கின்றனர். ஆனால் வீடு கட்டி முடிந்து பார்ப்பான் வந்து ஓதியவுடன் அவ் வீட்டிற்குள் செல்ல இப் பாட்டாளி மக்களுக்கு உரிமை இல்லை. இந்த முரண்பாடுகளை தங்கள் உடல் உழைப்பின் மூலம் பொருள்களை உருவாக்கிய பாட்டாளி மக்களும் உணரவில்லை. அதனால் பயன் அடைபவர்களும் உணரவில்லை. இந்த இடங்களில்தான் பொருளியலை விட மக்களின் உரிமையியல் போராட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து உரிமையுணர்ச்சியைத் தட்டி எழுப்ப வேண்டும். ஏனெனில் இந்த நடைமுறை உண்மையை இருவகுப்பாரும் அறிவியல் அடிப்படையிலோ மாந்த நேய அடிப்படையிலோ உணரமுடியாத நிலையில், ஆளும்

வகுப்பின் அதிகாரச் செருக்கோடும், பாட்டாளி மக்கள் உரிமையுணர்ச்சிகள் கிளர்ந்து எழ முடியாத மனவியல் அழுத்தங்களிலேயும் உழன்று கொண்டிருப்பதற்கான மதவியல் கருத்துகள் தொடர்ந்து பரப்பப் படுகின்றன. நிலவுடைமை அமைப்பின் இத் தீண்டாமை கொடுமைகள்—பிரித்தாளும் சூழ்ச்சிகள், முதலாளிய அமைப்பிலும் வேறு வடிவங்களில் இருப்பதாலேயே பாட்டாளி மக்கள் முழுமையாக ஒன்றிணைந்து தங்கள் பொருளியல் சமநிலைக்கான போராட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை,

உரிமையியலையும் பொருளியலையும் வெவ்வேறு கோணங்களிலும் அளவுகளிலும் விளக்குகின்ற **அம்பேத்காரியம், பெரியாரியம், பெருஞ்சித்திரனாரியம், மார்க்சியம்** போன்றவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

அம்பேத்காரியம்:

இளமையில் தான் பட்ட குமுகக் கொடுமைகளையும், அக் கொடுமைகளுக்குட்பட்ட மக்களையும் பற்றி தன் இறுதி நாள்வரை சிந்தித்து அதற்காகப் போராடியதாலேயே குமுகப் புரட்சியாளர்களில் ஒருவராக அண்ணல் அம்பேத்கார் திகழ்கின்றார். இந்தியாவில் சாதிப் பிரிவுகளும் குமுக ஒடுக்குமுறையும் இருக்கும்வரை, தங்கள் தற்காப்பிற்கும், தங்கள் வகுப்பு மக்களை ஒன்றிணைப்பதற்கும் அமபேத்காரியம் இயங்கும்- இயங்க வேண்டும். ஒரு மனிதனுக்கு உடலில் பல்வேறு காயங்கள் இருந்தாலும் அவற்றுள் எது அழுத்தமானதோ- ஆழமானதோ அதுவே மிகுந்த வலியை உண்டாக்கும். அவ்வாறே இங்குள்ள குமுகச் சூழல் ஒவ்வொரு பிரிவினருக்கும் வெவ்வேறுவகையான மனவியல் தாக்கங்களைக் கொடுக்கின்றது; அதற்காகப் போராட வைக்கின்றது. ஆனால் அடித்தளத்திலிருந்த அம்பேத்கார் அவர்கள பொருளியல் உரிமைக்காகப் போராடவில்லை, மாந்தனின் பொது உரிமைகள் நிலை நாட்டப்படும்போது பொருள் தானே வந்து சேரும் என்ற எண்ணத்தில் குமுக உரிமைக்காகவே இறுதிவரை போராடினார்.

அவரின் எண்ணங்களை—மாந்தனின் உரிமையியல் சார்ந்த உணர்வுகளை அவரின் எழுத்துக்களின் வாயிலாகவே அறிவோம்.

''இந்த இந்தியாவை எவ்வாறு எனது தாயகமாகக் கருதமுடியும். நாய்கள் பூனைகளைவிட நாங்கள் மோசமாக நடத்தப்படுகிறோம். தன் மதிப்பு உள்ள எந்த தீண்டப்படாதவன் இந்தியாவைத் தன் தாய்நாடாகக் கருதுவான்? இந்தியா எங்களுக்கு அளித்த உதவி. இன்னல்களையும் கொடுமைகளையும் மலைபோல் எங்கள்மீது சுமத்தியதே ஆகும். ஆகவே, தெரிந்தோ, தெரியாமலோ இந்தியப் பற்று எங்களுக்கு இல்லை என்றால், நாங்கள் இல்லை பொறுப்பு' இந்தியாவே ஆகும். என்னை இரண்டகன் என்றால் அதற்கும் நான் இல்லை பொறுப்பு, இந்தியாவே ஆகும்''.

''குமுக ஒடுக்குமுறையோடு ஒப்பிடும்போது அரசியல் ஒடுக்குமுறை ஒன்றுமே இல்லை''.

''புத்தரும் குருநானக்கும் செய்ததைப்போல் சாத்திரங்களின் அதிகாரத்தை மறுக்க வேண்டும்''.

''சாதி ஒழிப்பில்-வைதீகப் பிராமணர், நடுநிலைப் பிராமணர் இருந்தாலும் இரண்டு பிரிவினரும் பங்காளிகள் தான், ஒரே உடலின் இரு கைகள்- ஒரு கை பாதிக்கப் படும்போது மற்றது அதைக் காக்கப் போராடவே செய்யும்''—என்ற கூற்றில் எதிரெதிரான பல்வேறு அரசியல் இயக்கங்களில் இருக்கின்ற பார்ப்பனியத் தலைமை இந்திய ஒருமைப் பாட்டிலும் இடஒதுக்கீடுக்கு எதிரான கொள்கையிலும் ஒன்றாக இருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

''புரட்சி மனப்பான்மை கொண்டவன் போப் ஆக மாட்டான். போப் ஆனவர் புரட்சி செய்ய விரும்ப மாட்டான். இந்தக் கருத்து இந்தியாவின் பிராமணர்களுக்கும் நன்றாகப் பொருந்தும்''—இதிலும் பிராமணியத்தின் உண்மை உருவத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இந்திய அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடி இட ஒதுக்கீடு செய்தது, அவ்வழியிலேனும் கல்வி உரிமையையும் சட்ட மன்றத்திலும். அதிகார வகுப்பிலும பங்கு கொண்டு தங்கள் மக்கள் விழிப்புணர்வு பெற வேண்டுமென்ற எண்ணத்தில் தான், அன்றைய குமுக, அரசியல் சூழலில் தன்னால் முடிந்த அளவு அமபேத்கார் அவர்கள் பாடுபட்டார்கள். இன்றைய போலி மார்க்சியவாதிகள் அவரைக் குறை சொல்வது பொருந்தாது. ஆனால் அவரின் உழைப்பால் கல்விக் கண் திறக்கப்பட்டு, அரசியல் பதவிக்கும் அரசுப் பணிக்கும் சென்ற பலர் அவரின் கனவை நனவாக்கவில்லை. சிலர் தான் அதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

பெரியாரியம்!

அண்ணல் அம்பேத்காரைப் போலவே, தந்தை பெரியாரும் பிராமணியத்தின் கொடுமையை உணர்ந்து, அப் பிராமணியம் வேர் கொண்டுள்ள இந்துமதம், இம் மதவியல் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்கின்ற இதிகாசம், புராணம் குப்பை கூளங்களை கடுமையாக எதிர்த்தார். அவைகளின் பொய்மையைத் தோலுரித்துக் காட்டினார். மக்களின் உரிமை உணர்வுகளையும் பகுத்தறிவையும் முடமாக்குகின்ற—எல்லா மதங்களும் கட்டிக் காக்கின்ற 'கடவுள் உண்டு' என்ற கொள்கையை மறுத்து கடவுள் இல்லை' என்ற நாத்திகக் கொள்கையை மக்களிடம் பரப்பினார். கடவுளின் பெயரைச்

சொல்லி மக்களை மயங்க வைத்து அவர்களின் உழைப்பையும் பொருளையும் சுரண்டிக் கொண்டிருந்த மத குருமார்களுக்கு எதிராக மக்களின் பகுத்தறிவுணர்ச்சியைத் தட்டி எழுப்பினர். தன் தள்ளாத வயதிலும் பிராமணியத்தின் சூழ்ச்சியையும் நம் மக்களின் சூத்திரப் பட்டத்தையும் போக்க பட்டி தொட்டியெல்லாம் சென்று 'பணியாற்றினர். தந்தை பெரியாரின் தொடர்ந்த உழைப்பாலும் முயற்சியாலுமே பிராமணியத்தால் அழுத்தப் பட்டிருந்த அடித்தள மக்களில் சிலரேனும் தன்னுணர்வு பெற்றனர் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த இராசீவை வீழ்த்தி, எல்லாருக்கும் கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் முதலமைச்சராக வந்ததும் தந்தை பெரியாரின் போராட்டங்களினாலேயாகும். பெரியாரின் பிற் படுத்தப் பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடுப் போராட்டங்கள் இன்று வட இந்தியா முழுமையும் பரவி, இந்து மதக் கட்டமைப்பிலும் தரகு முதலாளியக் கட்டமைப்பிலும் இறுக்கமாக்கப் பட்டிருந்த இந்திய அரசமைப்பை உள்ளிருந்தே உடைப்பதற்கான முரண்பாடுகளை உருவாக்கி இருக்கின்றது. இவரின் உரிமையியல் போராட்டங்கள் ஆணாதிக்கத் தன்மையில் அழுத்தப் பட்டிருந்த பெண்களின் எழுச்சிக்கும் வித்தூன்றியது. 'தேவதாசி' ஒழிப்புச் சட்டம் தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில் நுழைவுப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம போன்ற உரிமையியல் சார்ந்த போராட்டங்களே அடுத்த பொருளியல் உரிமைக்கான போராட்டங்களை நடத்துவதற்கு தூண்டுகோலாயிருந்தது.

பெருஞ்சித்திரனாரியம்,

குமுகப் படிநிலை வளர்ச்சிக் கூறுகளையும், மக்களின வேறுபாட்டு உணர்வுகள் அனைத்தும் மொழி உணர்வில் ஒருங்கிணைதலையும், அனைத்துப் பிரிவு மக்களுக்கும தங்கள் தாய் மொழியே இணைப்புப் பாலமாக இருப்பதையும் பகுத்தாய்ந்து; மொழி சார்ந்த இன உறவிலும், அவ்வின மக்களின் முன்னேற்றத்திற்கு, தேசிய இன விடுதலைப் போராட்டங்களே சரியான குமுக அறிவியல் நெறியாகும் என்பதில் தெளிவோடும் இருப்பவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள்.

குமுக மாற்றச் சிந்தனைக்கு ஈர்க்கப்பட்டு பல்வேறு திசைகளில் இயங்கியவர்கள் இன்று தமிழகத்திலும் வெவ்வேறு மாநிலங்களிலும் தேசிய இன 'விடுதலையை' நோக்கி வந்து கொண்டிருப்பது ஒன்றே இவரின் நெடு நோக்கான கொள்கை உறுதியைக் காட்டும். அண்ணல் அம்பேத்கார், "தந்தை "பெரியார் போன்றவர்கள நடத்திய உரிமையியல் போராட்டங்களின தொடர்ச்சியாகவே, சிறிது விரிந்த அளவில் பாவலரேறு அவர்களின் 'தமிழ்த் தேசிய இன விடுதலைக்' கொள்கையும் இருக்கிறது.

ஒருவருக் கொருவர் உரிமை மறுத்துக் கொண்டும், எதிர்த்துக் கொண்டும் 'தமிழ் தேசிய இனம்' முழுமையும் ஆரியப் பார்ப்பனியத்திற்கும் வட இந்திய முதலாளியத்திற்கும் தொடர்ந்து அடிமைப் பட்டிருப்பதைத் தன் மெய்யறிவால் உணர்ந்து, அம்பேத்காரியம், பெரியாரியம், மார்க்சியம் போன்ற வெவ்வேறு கொள்கைகள் தமிழ்த் தேசிய இன ஓர்மையை பிளவு படுத்திவிடும் என்ற எண்ணத்தில், அவைகளை தேவையான இடத்தில் மட்டும் விளக்கி அதிகம் வலியுறுத்தாமல், தனி . வழி கண்டவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள்.

தனித் தமிழை வலியுறுத்தி, 'தென்மொழி' மூலம் 'தமிழ்த் தேசிய இன விடுதலைக்கு' ஓர் அரசியல் உள்ளடக்கத்தைத் தந்தவரும்' ஒரு தேசிய உன மக்களை சிதைப்பதற்கு அல்லது அழிப்பதற்கு அம்மக்களின் மொழியைச் சிதைத்து அழித்தாலே போதும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து, அதில் பாதி வெற்றியுமடைந்த பார்ப்பனியத்தின் சூழ்ச்சியைச் சரியாகக் கணக்கிட்டவரும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள். ஆவார் இதனால் மற்ற சிந்தனையாளர்களின் கொள்கையிலிருந்து சிறிது தள்ளி நின்று, தள்ளாடிக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய இனத்திற்கு. உயிர்வளி ஊட்டியவர்; ஊக்கம் அளித்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

உரிமையியல் போராட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, பொருளியல் போராட்டத்திற்கு அடுத்த கட்டத்தைக் காட்டுவது இங்குள்ள மக்களின் மன உணர்வையும் அறிவு உணர்வையும் நுணுகி உணர்ந்ததாலேயாகும். ஆகவே மாந்த நேயச் சிந்தனையாளர்கள் வரிசையிலும் உலகத் தமிழின வரலாற்றிலும் பெருஞ்சித்திரனாரியம் என்ற ஒரு பகுதியே தனியாக—சிறப்பாகப் பொறிக்கப்படும் என்பது தண்டமிழ் உண்மையாகும்.

மார்க்சியம்:

இவ்வுலகிலுள்ள உயிரினங்களில் ஒன்றாகிய மாந்த இனத்தின் வரலாற்றை அதன் தொடக்க நிலையிலிருந்து, உழைப்பு-பொருள் உருவாக்கம்-உருவாக்க உறவுகள் போன்ற இயக்கவியலைக் கண்டுபிடித்தும், தான் வறுமையிலேயே வாடிக் கொண்டிருந்த நிலையிலும் எதிர்காலத்திலேனும் உலகப் பாட்டாளி மக்கள் தங்கள் உழைப்பின் பயனைச் சமமாக நுகர வேண்டுமென்ற பொருளியல் கோட்பாட்டை வகுத்தும், அடித்தளத்தை அசைத்துக் காட்டியவர் அறிஞர் காரல் மார்க்சு ஆவார்.

அவரின் இயக்கவியல் கோட்பாடுகளை அடிப் படையாக வைத்து உருசியாவில் இலெனினும், சீனவில் மாசேதுங்கும், வியட்நாமில் கோசிமின்-

னும் மற்றும் சில நாடுகளில் சிலரும் குமுக மாற்றத்தைச் செய்தார்கள். ஆனால் மாந்தனின் மனவியல் சார்ந்த தனி உரிமைகளை மறுத்து பொருளியல் உரிமைகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடுத்தாலும், பாட்டாளிய அரசி ஆளுமையரும் பெருந்தேசிய இன ஆளுமையரும் மக்களையும் மற்ற சிறு தேசிய இனங்களையும் ஒடுக்கிச் சுரண்டுவதாலும், தங்களின் ஒடுக்கப்பட்ட உரிமைகளை முன் வைத்துச் சோவியத்து நாட்டிலும் கிழக்கு ஐரோப்பியாவிலும் தங்களின் தேசிய இன விடுதலையைப் பெற்றுவிட்டனர். மற்ற தேசிய இனங்கள் தங்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. ஆக, பொருளியல் உரிமையை மட்டும் முன் வைத்து மற்ற உயிரியக்க உரிமைகளை ஒடுக்குவது மாந்தனின் முழு வளர்ச்சிக்கு ஏற்றதாகாது.

''காடைக்கு கலக் கம்பைப் போட்டாலும் அது காட்டைத்தான் நோக்கும்''—என்ற பழமொழியும், 'கூண்டினுள் அடைக்கப்பட்ட பச்சைக் கிளிக்குப் பாலும், பழமும் அளித்தாலும் அது வெளியில் பறப்பதையே விரும்பும்'—என்ற சொலவடையும் மற்ற உரிமைகள் இல்லாத பொருளியல் நுகர்ச்சி மட்டும் உயிரினங்களுக்கு முழு மகிழ்ச்சியளிக்காது என்பதையே காட்டுகிறது. இங்குள்ள மார்க்சிய சிந்தனையாளர்கள் பொருளியல் புரட்சியை மட்டும் முன் வைத்து மக்களின் பல்வேறு உரிமையியல் புரட்சியை அடக்கியதாலேயே, பொதுவுடைமைக் கருத்துகள் இன்னும் மக்களிடம் போய்ச் சேரவில்லை. இதிலும் பார்ப்பனியத் தலைமையே தொடர்ந்து திசைத் திருப்பிக் கொண்டுள்ளது என்பதை உண்மையான குமுகப் புரட்சியாளர்கள் சிந்திக்கவும்.

ஆகவே மாந்தனின் அனைத்து உரிமையியல் தேவைகளையும் நிறைவு செய்வதற்கு மார்க்சிய இயங்கியலை நாம் மேலும் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும்; செழுமைப் படுத்த வேண்டும். மாந்த இனத்தைப் பல்வேறு கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை செய்ய மார்க்சிய இயங்கியல் ஒரு தொடக்க வழியைக் காட்டியிருப்பதால், குறைகளைக் களைந்து அதை நிறைவாக்குவோம்.

முடிவுரை:

மேலே விளக்கிய கருத்து விளக்கங்களிலிருந்து, மக்களின் உரிமையியலுக்கும் பொருளியலுக்கும் உள்ள நுட்பமான, இணைவான ஒற்றுமையையும் வேறுபாட்டையும் அறிந்தோம். தனி ஒருவரோ அல்லது அவரைச் சார்ந்த குடும்பத்தினரோ தங்கள் சொந்த நிலத்திலோ அல்லது ஒரு தொழிற்சாலையிலோ உரிமையோடு பொருள் உற்பத்தியில் ஈடுபடும் போதும் சிறிதளவு கூலிக்கு மற்றவரிடம் வேலை செய்யும் போதும், அவர்களுக்கு ஏற்படும் ஆர்வத்தையும் ஆர்வமின்மையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த உளவியல் தன்மை தனியுடைமை அமைப்பு இருக்கும்வரை இருந்துதான் தீரும். இதிலிருந்து படிப்படியாக மக்களை உலகந் தழுவிய பார்வைக்கும் மக்கள் சிந்தனைக்கும் உயர்த்த வேண்டும். மாந்தனின் தனி உரிமைக்கும் பொது உரிமைக்கும் உள்ள ஒற்றுமையையும் வேறுபாட்டையும் பகுத்தாய்ந்து இணைவான கோட்பாடுகளை வகுக்க வேண்டும். மக்களின் அனைத்து வகையான உரிமையியல் தேவைகளையும் நிறைவு செய்யக் கூடிய, பொருளியல் பகிர்வே இக் குமுகம். இவ் வுலகில் நிலை பெறுவதற்கான இறுதி நிலையாக இருக்க முடியும். மாந்தனின் இயக்கத்தை பொதுவாகவும் சிறப்பாகவும், இந்தியச் சூழலுக்கும் தமிழகச் சூழலுக்கும ஒப்பிட்டு விளக்கியதை தமிழியல் உணர்வும் உலகியில் நோக்கம் கொண்டோர் மனம் கொள்வார்களாக! மேலும் இவ்வழியில் சிந்தித்துச் சிறந்த வழியைக் காட்டுவார்களாக! O

நம் பாவலரேறு ஐயா அவர்கள் சிறைக்குச் சென்ற விளக்கங்கள்.

1. 1965— இந்தியெதிர்ப்பில்-அரசை எதிர்த்து ஆசிரியவுரை எழுதியதால் வேலூரில் 2 மாதம் சிறை.
2. 1972— தமிழக விடுதலையை வலியுறுத்தி—தமிழக வரலாற்றில் முதன்முதலில் மாநாடு நடத்திச் சிறை—மதுரையில் ஒரு கிழமை.
3. 1974— தமிழக விடுதலை மூன்றும் மாநாடு நடத்தியதால் சென்னை நடுவண் சிறையில்—ஏறத்தாழ 2 மாதங்கள்.
4. 1976-77- தமிழக விடுதலைக் கருத்துக் கொண்டிருந்ததால் ஓராண்டு மிசாச்சிறை—சென்னை நடுவண் சிறை.
5. 1981— மனு(அ)தர்ம நூலுக்குத் தீவைத்துக் கொளுத்தியதால் கோவைச் சிறையில்—ஒரு மாதம் சிறை.
6. 1990— தஞ்சையில் தமிழர் தேசியத் தன்னுரிமை அறிவிப்பு மாநாட்டிற்கு சென்றபோது திருச்சி நடுவண் சிறை—ஏறத்தாழ ஒரு மாதம் சிறை.
7. 1991— சென்னைக் கூட்டத்தில் இராசீவ் கொலையைச் சரியெனப் பேசியதாலும், தனுவை வீரப்பெண் என புகழ்ந்ததாலும் சென்னை நடுவண் சிறை-15 நாள்.
8. 1993— விடுதலைப் புலிகள் வெற்றி உறுதி என்றும், தமிழக விடுதலைத் தவிர்க்க முடியாதது என்றும் 'தமிழ்நிலம்'. இதழில் எழுதியதால் 'தடா' சிறையிருப்பு.

சேர்ந்து வாழ்வதும், பிரிந்து வாழ்வதும்!

ஒருவரோடொருவர் சேர்ந்து வாழ்வது எப்படி ஒரு மெய்ப்பொருளோ, அப்படியே பிரிந்து வாழ்வதும் ஒரு மெய்ப்பொருளே!சேர்ந்து வாழ்வதால் நன்மைகள் சில பெறுவதைப் போலவே, பிரிந்து வாழ்வதிலும் நன்மையுண்டு. இவ்விடத்தில் 'சேர்ந்து என்பதற்கு எப்படி 'வேற்றுமையற்ற முறையில் இணைந்து' என்று பொருளை கொண்டுவிடக் கூடாதோ, அல்லது அவ்வாறு மட்டுந்தான் பொருள் படுத்திக் கொள்ளக் கூடாதோ அப்படியே,பிரிந்து' என்பதற்கும்'பகைமையுற்ற நிலையில் வேறுபட்டு' என்று பொருள் கொண்டுவிடக் கூடாது; அல்லது அப்படி மட்டுந்தான் என்று பொருள் படாது: தனிமொழி, பண்பாடு, வரலாற்று அடிப்படை, குமுகாயப் பொருளியல் அரசியல் அடிப்படைகளே ஓர் இணைந்துள்ள நாட்டின் பகுதி மக்களைப் பிரிவினை எண்ணத்திற்குத் தூண்டுகின்றன: இணைந்து வாழ்வதற்கும் அவையே அடிப்படைகளாகின்றன. இவ்வடிப்படைகளால் இணைப்பு நிலைக்கு எப்படிச் சார்புநிலைக் கரணியங்கள் காட்ட முடியுமோ, அப்படிப்பட்ட நிலையில் பிரிய வேண்டும் என்ற எண்ண எழுச்சிக்குத்தான் அடிப்படையைக் காணவேண்டுமேயன்றி,பிரிந்து போகக்கூடாது என்பதற்கான அடிப்படையை எவரும் ஆராய்தல் தேவையில்லாதது. மாந்தனின் தனிப்பட்ட ஒரு நிலைப்பாடு என்பது வேறு. ஒரு நாட்டின் தனிபட்ட ஒரு நிலைப்பாடு என்பது வேறு. இரு வேறுபட்ட அடிப்படை அமைப்புகள் அமைந்த இரு நாடுகளோ, இனங்களோ ஒன்றோடு ஒன்றை இணைப்புச் செய்து கொள்ள விரும்புவதால் எப்படிச் சிலர்க்குச் சில நன்மைகள் விளையத்தான் செய்யுமோ, அப்படியே அவை இரண்டும் தம்முள் தனித்தனிப் போக்குகளை ஏற்படுத்திக்கொள்ள முனைவதாலும் சில நன்மைகள் விளையத்தான் செய்யும். முன்னைய நன்மைகளைக் காட்டிப் பின்னைய நன்மைகளை மறுப்பது அறியாமையாகும். அவ்வறியாமை நல்ல அரசியல் அறிவாகாது; மாந்த மெய்ப்பாட்டியலுக்கு ஒத்ததாகவும் கருதப்பெறுது.

பெரும்பாலும், இருவேறு நிலப்பகுதிகளின் இணைப்பு நிலைக்கு எப்படி வரவேற்பு இருக்குமோ, அப்படியே பிரிவு நிலைக்கு வரவேற்பு இருக்கத்தான் செய்யும். இதில், இரு நிலைகளையும் நன்கு விளங்கிக் கொண்டு செயலாற்றுவதில்தான் அறிவு துணை நிற்க வேண்டுமே தவிர, மட்டையடித்தனமாக ஒன்றிற்காக ஒன்றைத் தவிர்த்து விட முயற்சி செய்வதற்கு அறிவுத்துணை தேவையே இல்லை. குருட்டுத் தன்மை என்பது அறிவு நிலையில் இருசாரார்க்கும் பொதுவே! ஆள்பவனுக்கு அந்நிலை குறைவாக இருக்குமென்றோ, ஆளப் பெறுவோர்க்கு அது மிகுந்திருக்குமென்றோ கருதுகின்றவன் காலப்போக்கில் புறந்தள்ளப்பட்டு விடுவது இயற்கை. பிரிவு என்பது பகைமையாகாது: இணைப்பு என்பது நட்பும் ஆகிவிடாது: எனவே பிரிவு என்றவுடன் வெகுண்டெழக் கூடியவனோ, முகத்தைச் சுளிப்பவனோ, இணைப்பு நிலை பற்றிப் பேசுவதற்குத் தகுதியற்றவனாவான்: தாயை மகள் பிரிவதற்கும் காலம் ஒன்று உண்டு என்பதையும், குஞ்சைத் தாய் தனித்து வாழ விடுவதற்கும் அடிப்படை உண்டு என்பதையும் அரசியல்மூடர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும். பிரிந்து போவதைத் தடுப்பவன் ஒருகால் இணைந்திருக்கும் நிலையினால் மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ அந் நிலையினால் ஊதியம் பெறுவோனாகத்தான் இருக்க வேண்டும். தாய்மைப் பாசத்துடன் பிரிவைத் தடுப்பவன் ஓரின மக்களின் வளர்ச்சியைத் தடுக்கும் அறியாமையைச் செய்கின்றான். தனி மாந்த நிலையிலும், பொது மாந்த அல்லது குமுகாய நிலையிலும் பிரிவு என்பதையும் இணைப்பு என்பதையும் ஒரே பொருளுடைய சொற்களாகக் கருதிக்கொள்ளக் கூடாது. அதனால் பிழைகளும் கடுமையான விளைவுகளுமே எஞ்சும்.

இவ்வுலகம் தோன்றியதிலிருந்து தன்னுடன் இணைந்துள்ளஒரு நாட்டைப் பிரிந்து போவதற்கு மன நிறைவோடு இசைவளித்த வேறொரு நாடு இருந்ததே இல்லை. அந்த நாடு தன்னொடு சேர்ந்திருப்பதால் தன் நாட்டுக்கு ஏதோ ஒரு வகையில் இழப்பு என்பதை உணர்ந்தாலன்றி, சேர்ந்துள்ள நாட்டின் நன்மைக்காக தனிநிலைக் கோட்பாட்டின்படி—உரிமைக்கு ஒப்பிய நாடோ, ஒரு தலைவனோ முன்னறிவோடு நடந்துகொண்டதாக இன்றுவரை வரலாறு இல்லை. ஒவ்வொரு நிலையிலும் கண்ணீரும் குருதியும் சிந்தப் பெற்றுத் தான் ஒரு நாட்டின் வல்லதிகாரத்திலின்று அதன் பகுதி நாடுகள் விடுபாடு கொண்டிருக்கின்றன. இந்நிலைக்கு மாந்த முன்னறிவோடு ஒப்புதல் தரக்கூடிய பேரறிஞன் என்று ஒரு நாட்டின் தலைவனாக இருந்ததில்லை. அதனாலேயே ஒரு நிலத்தில் பல கொடிகள் அடுத்தடுத்துப் பறக்கின்றன; கிழித்தெறியப் பட்டிருக்கின்றன. இப் பொது மெய்ப்பாட்டியல்களின் அடிப்படையில்தான் தமிழகப் பிரிவினை'யை விளங்கிக் கொள்ளல் வேண்டுமேயன்றி, மனச்செருக்குடனோ அறிவுச்செருக்குடனோ ஆளுமைஅதிகாரச் செருக்குடனோ இச்சிக்கலைத் தீர்க்க முனைவது சார் மன்னனின் கொடுமையைப் போன்றது: அத்தகையோர்க்கு இத்தகு மெய்ப்பாட்டியல் (உண்மைக் கூறுபாடு)களால் விடை சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை. வேறு வகை மெய்ப் பாட்டு இயல்(உடல் முயற்சிக் கூறுபாடு)களாலேயே விடை சொல்லுதல் வேண்டும். உண்மையின் வலிவைப் புறக்கணிப்பவர்கள், உடல் வலிமையை என்றும் புறக்கணித்ததில்லை. வரலாறு முன்னோக்கித்தான் போகுமேயன்றி,

பின்னோக்கிப் போனதில்லை. எனவேதான் தமிழகப் பிரிவினையை ஏதோ தீண்டத் தகாதவனின் கோரிக்கையைப் போல் கருதிக்கொண்டு இருப்பவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். தீண்டத் தகாதவனையும் தீண்டவேண்டும் என்று சட்டமியற்றும் காலம் இது. அதற்குத் தகுந்தவாறு மக்களின் இயற்கையான — கூர்தலற மனவெழுச்சிகளை விளங்கிக் கொண்டு அவற்றிற்குச் செவிசாயுங்கள்:

இந்தப் போக்கைச் சிலர் 'தன் முனைப்பு' என்னலாம்; 'தன்னழுத்தம்' என்னலாம்; சிலரோ தம் கட்சித் தலைவர்களைக் கொண்டு மட்டுந்தான் இக்கோரிக்கை முழங்கப் பெறல்வேண்டும் என்று 'கந்தாயம்' பேசலாம். ஆனால் எந்தத் தமிழகத் தலைவரையும் நம்பிப் பயனில்லை என்ற நிலை தெளிவாக உணரப்பெற்று விட்டது. எதற்காகச் சட்டமன்றம் போகவேண்டும் என்று தொடக்க நிலையில் கரணியம் காட்டினரோ, அந்தக் கரணியங்கள் அவர்கள் அமர்ந்த பதவி நாற்காலிகளுக்கு ஆணிகளாக அறைய பெற்றுவிட்டன; அவர்களின் மனைவி மக்களுக்கும் எதிர்காலப் பிறங்கடைகளுக்குமான ஒப்பந்தப் பட்டயங்களாகவும், நிலபுலம் வீடுகளாகவும் மாற்றப் பெற்றுவிட்டன. இன்னும் விளக்கமாகச் சொன்னால் அவர்கள் தங்களுக்குள்ளேயே எவரெவர் முன்னே போவது; எவரெவர் பின்னே வருவது என்ற போராட்டத்தை வேறுஎழுப்பிக் கொண்டு விட்டனர். தமிழர் வடவரோடு ஒட்டி உறவாட வேண்டியதற்காகக் கூறப்பெறும் ஒருமைப்பாட்டின் பகட்டான போலி உரைகளைப் போலவும் செயல்களைப் போலவும், நம்மை யாள வந்த — வழி நடத்திச் செல்ல வந்த தலைவர்களிடையே போலியான ஓர் உடன்பிறப்புப் பாசமும் ஒற்றுமையுணர்வும் பேசப்பெறுகின்றன; காட்டப் பெறுகின்றன. அவர்கள் உள்ளத்திலிருப்பதெல்லாம் ஒருவரை ஒருவர் எடுத்து விழுங்குவதற்கான கால ஆராய்ச்சியும், இட ஆராய்ச்சியுந் தான். இத்தகைய தலைவர்களை நோக்கிக்கைகாட்டும் குட்டி தலைவர்களைப் பற்றியோ, குறும்புப் பேச்சுக்காரர்களைப் பற்றியோ நமக்குக் கவலையில்லை. அவர்களுடைய அறிவின் மேலும்நம்பிக்கையின் மேலும் அவர்களுக்கிருக்கும் அழுத்தமான பிடிப்புப் போலவே நமக்கும் நம் அறிவின் மேலும் நம்பிக்கையின் மேலும் வலிந்த இரும்புப் பிடி உண்டு.

வடநாட்டினரின் வல்லாட்சி — ஒரு சார்பு அதிகார உரிமை — தமிழர்களையும், தமிழர்தம் பண்பாட்டு வளங்களையும் பூண்டோடு அழித்து, அவர்களை என்றென்றும், மொழி, இன, பொருளியல் அரசியல் அடிமைகளாக அழுத்தி வைத்துக் கொண்டிருக்கும் கரவு சான்றது. அதற்குத்தகச் சட்டங்கள் மாற்றி அமைக்கப் பெறுகின்றன. அரசியல் நடைமுறைகள் தலைகீழாக்கப்படுகின்றன; நிலக் கூறுபாடுகள் பூசி மெழுகப்படுகின்றன. இவற்றின் இடிபாடுகளுக்கிடையில் அவர்களின் மொழி, இன, பண்பாடுகள் விரிவுபடுத்தப் பெறுகின்றன; அவர்களின் வரலாறுகள் திருத்தி எழுதி வைக்கப்பெறுகின்றன. அறிவும் அக நோக்கும் அற்ற அவர்களைச் சேர்ந்த புல்லியர்களெல்லாரும் நாம் வணங்கத் தகுந்தத் தலைவர்களாக வழிகாட்டிகளாக வந்து அமர்ந்து கொள்கின்றனர். நம் இன வழிகாட்டிகளும், நம்மின் பழம்பெரும் அறிஞர்களும் அவர்களுக்குக் கோமாளிகளாகவும், வாயில் காப்போர்களாகவுமே பயன்படுத்தப் பெறுகின்றனர்.

ஒரு பெரும் அரசியல் மறுமலர்ச்சி வரலாறு உருவாவதை எந்த தலைவனோ தொண்டனோ தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை மட்டும் உறுதியாகக் கூறி கொள்ள விரும்புகின்றோம். காலத்தின் விளைவு இது என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமேயல்லாமல் எந்த எதிர் விளைவுக்கும் முயற்சி செய்து வரலாற்று வெள்ளத்தில் மூழ்கிப் போக வேண்டா என்று எதிரது உணரும் ஆற்றல் உள்ளவர்களையும் வேண்டிக்கொள்கின்றோம்.

(தெமொ.சு 9 ஓ.11 1972) — பெருஞ்சித்திரனார்,

தடா!

பஞ்சாபு மக்களைக் கொன்றதடா!
பைந்தமிழ் நாட்டை அடைந்ததடா!
துஞ்சாத் தொண்டால் தமிழ்வாழத்
தம்முடல் ஆவி தொடர்ந்துதரும்
அஞ்சாப் பெருஞ்சித்திரனார் மேல்
அறிவை இழந்து பாய்ந்ததடா!
நஞ்சாய் மாற்றித் தமிழ்மண்ணை
நலிவுறச் செய்ய முனைந்ததடா!
நாட்டைக் காத்திட என்றதடா!
நாட்டுணர் வாளரை நசுக்குதடா!
பேட்டை அரம்பர்க்(கு) உதவுதடா!
பேடிகள் வாழப் போட்டதடா!
வேட்டைக்(கு) உகந்த காடென்று
வியன்தமிழ் நாட்டில் நுழைந்ததடா!
வீட்டைப் பகலில் திருடுதடா!
வெறியர்கள் வாழ்வைப் புதுக்குதடா!
பார்ப்பன ஆட்சியைக் காக்குந்தடா!
பைந்தமிழ் அறிஞரைத் தாக்குதடா!
ஆர்க்கும் உரிமைக் குரல் ஒலியை
அடக்கி ஆள நினைக்குதடா!
ஊர்ப்பணந் தன்னில் உலவுதடா!
உரிமைத் தமிழை ஒடுக்குதடா!
நேர்மைக்(கு) எதிராய் நிற்குதடா!
நல்லோர் செயலை ஒறுக்குதடா!

நாட்டைப் பிடித்த நரி மாதின்
நச்சுக் கைகளில் ஆடுந்தடா!
காட்டைக் கிழித்து வருமாற்றைக்
கட்டி நிறுத்தத் துணியுதடா!
கோட்டை பறக்கச் செய்யும் புயலை
கூட்டில் அடைக்கப் பார்க்குதடா!
ஏட்டைப் புரட்டிக் காட்டிடவே
எந்தமிழ் நாடு கிளர்ந்ததடா!

பரமனந்தல் — தமிழ்ப்பித்தன்.

நடுநிலைச் சிந்தனையாளர்கள்' இதழாசிரியர்கள்,
பல முற்போக்கு எழுத்தாளர்கள் முறையீடு !

தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்யுங்கள்!

'மக்கள் வாழ்வியல் உரிமைக் கழகம்'—எடுத்த அரும் முயற்சி !

'தடா' சட்டத்தின்கீழ்ச் சிறையிலிருக்கும் பாவலரேறு ஐயா அவர்களை விடுவிக்கக் கோரி இந்திய அளவில் பல்வேறு துறை அறிஞர் 100-பேர் தமிழ்நாட்டு முதலமைச்சருக்குத் திறந்த மடல் அனுப்பியுள்ளனர். மடலில் கையொப்பமிட்டவர்களில் முகாமையானவர்கள் : முன்னாள் மீ உயர் வழக்குமன்ற நடுவர் வி. ஆர். கிருட்டிண (அய்ய)ர், பம்பாய் உயர் வழக்குமன்ற நடுவர் வி. எம். தார்குண்டே, செய்தியாளர் குல்தீப் நய்யார், ஆந்திர இயக்க பாலகோபால், தமிழ்நாடு மாநில மக்கள் உரிமைக் கழகச்செயலர் கா. மனோகரன் உள்ளிட்ட பேராசிரியர்கள், அறிஞர்கள் விடுத்த திறந்த மடல் வருமாறு :

''கடந்த இரண்டாண்டுகளாகத் தமிழ்நாட்டில் கருத்து வெளியீட்டு உரிமை அதிக அளவில் நசுக்கப்பட்டு வருவதைக் கண்டு நாங்கள் கவலைப்படுகிறோம். தடா, 1967ஆம் ஆண்டு சட்ட மாறான நடவடிக்கைகள் சட்டம் ஆகியன போன்ற ஒடுக்குமுறைச் சட்டங்கள், அரசைத் திறனாயும் சுவரொட்டிகளை ஒட்டுதல் போன்ற மிக இயல்பான செய்திகளுக்குங்கூடப் பயன்படுத்தப்படுவது பற்றிய செய்திகள் வந்துள்ளன.

'தடா' முற்றிலும் மக்கள்நாயகத் தன்மையற்றதும் மிகக்கொடியதானதுமான சட்டம் என்பதையும் உலகில் வேறெந்தவொரு நாகரிகமான நாட்டிலும் இத்தகையதொரு சட்டத்தைக் காண முடியாது என்பதையும் நாங்கள் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். மக்கள்நாயக முறையிலான எதிர்ப்பை நசுக்கும் ஒரே நோக்கத்துடன் இத்தகையச் சட்டம் பல மாநிலங்களில் எவ்வகைக் குற்றவுணர்வும் இல்லாமல் பயன்படுத்தப்படுவதை நாடு பார்த்துக் கொண்டு வந்துள்ளது. மக்கள் வாழ்வியல் உரிமைக் கழகமும்(PUCL), நாட்டிலுள்ள பிற மாந்த உரிமை இயக்கங்களும், மாந்த உரிமையில் அக்கறை கொண்டுள்ள தனித்தலைவர்களும் கீழ்க்காணும் செய்தியைச் சுட்டிக் காட்டியுள்ளனர்; இந்தியத் தண்டனைச் சட்டம், இந்தியச் சான்றுரை சட்டம், குற்றவியல் நடைமுறைச்சட்டம், அடிப்படை உரிமைகளை உறுதி செய்யும் அரசியல் சட்டத்தின் பல்வேறு நெறிகள் ஆகியவற்றைத் 'தடா' ஏளனப் பொருளாக்கியுள்ளது.

தேச பூரணை எழுத்துகள் பேச்சுகள் ஒன்று கூறப்படுவனவற்றை எழுதியதற்காகவும் பேசியதற்காகவும் பேராசிரியர்களும் அறிஞர்களும் தமிழ் நாட்டில் அண்மையில் தளைப்படுத்தப்பட்டுள்ளனர். 1993 சனவரிமாதம் முதல் 'தடா'வின் கீழ்க் காவலில் வைக்கப்பட்டுள்ள புகழ் பெற்ற தமிழறிஞரும் பாவலருமான திரு. பெருஞ்சித்திரனார் பற்றி நாங்கள் குறிப்பாகக் கவலைப்படுகிறோம். அறுபது அகவையைத் தாண்டிய இந்த அறிஞர், தமது வாழ்நாள் முழுக்க வெளியிட்டுவரும் சில கருத்துகளுக்காகத் தளைப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் அக் கருத்துகளை அவர் வெளியிட்டு வந்தமையின் காரணமாகத் தமிழ்நாட்டில் அமைதிக்கோ அல்லது அன்றாட வாழ்க்கைக்கோ குந்தகம் ஏதும் ஏற்பட்டதில்லை என்றும் நாங்கள் கேள்விப்படுகிறோம். நமது நாட்டில் பல்வேறு வடிவங்களில் வட்டார தேசிய உணர்வுகள் தோன்றியும் வெளிப்படுத்தப்பட்டும் வருகின்றன. வட்டார தேசிய உணர்வுடன் வெளிப்படுத்தப்படும் ஒரு கருத்தை நசுக்குவது ஒருபோதும் சிக்கலைத் தீர்க்காது என்பதற்கு நமது கடந்த கால பட்டறிவு ஒரு தெளிவான சான்றாக உள்ளது.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களைக் காவலில் வைத்திருப்பதை ஆய்வு செய்யுமாறும் அவரை விரைவில் விடுதலை செய்ய ஆவன செய்யுமாறும் தங்களை வற்புறுத்துகிறோம்''. O

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் தலையை மொட்டையடித்து அதில் மிளகாய் அரைப்பதாகும். சட்டம், ஒப்பந்தம் உச்சவழக்குமன்றம், நடுவர் மன்றம், மக்கள் பற்று, இந்திய ஒற்றுமை அனைத்தையும் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டது கருநாடகம். தமிழ் நாட்டுத் தமிழன் கேட்ட தண்ணீருக்கு கருநாடகத் தமிழனின் செந்நீரைக் குடித்தனர் கருநாடக வெறியர்கள். காவிரியில் அணைகள் கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய இந்திய அரசு காசுமீர் முதல் குமரிவரை இந்தியா ஒரே நாடு என்று கூவிக் கொண்டிருக்கின்றதேயன்றி ஓடி வந்து உதவவில்லை. மானமும் மறமும் கெட்டுப் போன தமிழர்கள் நெய்வேலியிலிருந்து மின்சாரத்தையும் பிறவற்றையும் தந்துகொண்டிருக்கின்றனர் கருநாடகத்திற்கு

அனைத்து நாடுகள் சட்டம் 'தமிழ்நாட்டிற்கு'ச் செயல்படுத்தப்படும் நிலை தோன்றும்வரை தமிழ் நாட்டிற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய காவிரித் தண்ணீர் கிடைக்க வாய்ப்பில்லை என்பது மறுபடியும் மெய்யாகியுள்ளது. O

பார்ப்பனக் கொழுப்பிற்கு அளவேயில்லையா?

உலகில் வேறு எங்கும் வேறு எந்த மத வழிபாட்டிலும் இல்லாத அவலங்கள் தமிழ் நாட்டில், உரிமை பற்றி வாய் கிழியப் பேசப்படுகின்ற இந்த 20-ஆம் நூற்றுண்டில் உள்ளன.

இங்குத் தமிழன் கட்டிய கோயில் கருவறைக்குள் தமிழன் நுழைய உரிமை இல்லை. நுழைந்தால் தீட்டாம். கடவுள் உருவத்தை வடித்த தமிழன் அது கருவறைக்குள் வைக்கப்பட்ட பிறகு அதைத் தொட உரிமை இல்லை. தொட்டால் தீட்டாகி விடுமாம். தமிழில் வழிபடக் கூடாது. வழிபட்டால் களங்கமாம். தமிழில் பூசை செய்ய உரிமையில்லை.

தமிழ் மொழி வழிபாட்டிற்கும் தமிழன் பூசை செய்யவும் கலைஞர் கருணநிதி பிறப்பித்த சட்டங்களை உச்சிக் குடுமி கட்டிக் கச்சம் வரிந்து கட்டிப் பார்ப்பனக் கூட்டம் தில்லி மீமிசை வழக்கு மன்றம் சென்று தடை பெற்று வந்தது.

தமிழ் வழிபாட்டிற்கு உரிமை கோரி நம் பாவலரேறு ஐயா அவர்கள் தில்லி சென்று உச்ச வழக்கு மன்றத்தில் வழக்காடிய வழக்கும் தமிழ் நாடு அரசு போட்ட வழக்கும் இன்னும் அந்த மன்றத்தில் தீர்க்கப்படாமல் உள்ளன.

உலகில் வேறு எங்கேயாவது அந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய வழிபாட்டு இடத்திற்குச் செல்ல—அவர்கள் மொழியில் வழிபடத் தடை உண்டா? எவன் அதற்கு உழைத்தானே அவனையே தடை செய்யும் மதம் வேறு ஏதும் உண்டோ?

இந்த அவலத்தைப் போக்க—மக்களின் உரிமையை நிலைநாட்ட—அதை மக்களுக்கு உணர்த்த போராட்டத்தின் ஒரு கட்டமாக மக்கள் கலை இலக்கியக் கழகம் என்ற அமைப்பினர் கடந்த 1-5-93-அன்று திருவரங்கம் கோயிலில் கருவறை நுழைவுப் போராட்டம் என்று அறிவித்து விரிவான அளவில் கருத்துப்பரப்பி வந்தனர். 1-5-93 அந்த அமைப்பினர் பொதுமக்களுடன் அதற்கெனப் புறப்பட்டபோது சிறைப் படுத்தப்பட்டனர்.

பிறகு அந்த அமைப்பினரும் சில பொதுமக்களும் 24-5-93-அன்று திருவரங்கம் கோயிலுக்குச் சென்று திடுமெனக் கருவறைக்குள் (உரிமையை நிலைநாட்டும் முகத்தான்) நுழைந்தனர்.

ஆனல் தமிழனின் அவலம்தான் என்னே! கருவறைக்குள் இருந்த பார்ப்பனக் கூட்டமும் என்னவென்று அறியாத வட இந்தியப் பற்றர்களும் அவர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டரசின் காவல் துறை கடும் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களை— 3 பெண்கள் 2 குழந்தைகள் உட்படப் பலரைச் சிறைப்படுத்தி அவர்களின் மேல் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடுத்து உள்ளது.

ஆரியப் பார்ப்பனரின் அடிமை அமைச்சர்களாக உள்ள தமிழர்களில் ஒரு சிலரும் இந்து மத வெறி அமைப்புகளில் பொறுப்புகளில், வெட்கமின்றி இருக்கிற சில தமிழர்களும் இச் செயலைக் கடுமையாக கண்டனம் செய்துள்ளனர். எவ்வளவு இழிவு! இந்தக் கண்டனக்காரர்களின் அடிமைத்தனம் என்று மாயுமோ?

இதை விட அவலம்—கேட்கவே நெஞ்சு கொதிக்கிற செய்தி என்னவென்றல் இந்தக் கருவறை நுழைவினல் கோயிலின் தூய்மை கெட்டு விட்டதாகக் கூறி "லகு சம்புரோட்சணம்" என்ற சடங்கை மணிக்கணக்கில் பார்ப்பனக் கூட்டம் அந்தக் கோயிலில் செய்துள்ளது. சூத்திரன் என்று இழிவாக வரையறுக்கப்பட்டுள்ள தமிழன் நுழைந்து விட்டான்; என்பதற்காக மட்டுமே இந்தத் தீட்டு (லகு சம்புரோட்சணம்) கழிககப்படவில்லை.

அந்தச் சூத்திரத் தமிழர்கள் கருவறைக்குள் நுழைந்ததும் தமிழில் முழங்கிவிட்டார்களே என்பதும் ஒரு காரணமாகும்,

தமிழர்களுக்கு இப்படி உரிமைகள் மறுக்கப்படுவது அல்லாமல் அவனையும் அவன் மொழியையும் அவனுடைய உப்பை, உழைப்பைத் தின்றுக் கொழுத்துக் கொண்டே இழிவுப்படுத்துகிற அவலத்தை இந்த அடிமைத் தமிழர்கள் உணர்ந்து போராட முன்வர வேண்டும். O

தமிழ்நிலம்
5, அருணசலத் தெரு, சென்னை-5

பெறுநர்

நூல்-அஞ்சல்

TN/MS (C) 557